[2014 ஜூலை 22

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவரை முற்றுகை இடுவதையே அவர்கள் குறிக்கோளாகக் கொண்டு, தகாத செயலைச் செய்துகொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை இங்கே ஏற்பட்டது. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய இருக்கைக்கு வந்து முற்றுகையிடும்போது, பேரவைத் தலைவர் அவர்கள் இங்கு ஏதாவது rulings கொடுக்க முடியுமா? நான் எழுந்து, "நீங்கள் அனைவரும் அவரவர் இடங்களில் உட்காருங்கள், வாய்ப்புத் தருவோம், பேசுங்கள். பேசியதற்குப் பின்னால் பேரவைத் தலைவர் அவர்கள் தங்களுடைய தீர்ப்பினை வழங்குவார்கள்" என்று பலமுறை எடுத்துச் சொல்லியும், அவர்கள் அதைக் கேட்கவில்லை. (குறுக்கீடு) திட்டமிட்டு, இங்கு வந்து குழப்பம் விளைவிப்பதற்கென்றே தங்கள் நடவடிக்கையை தொடர்ந்து அவர்கள் மேற்கொள்கிறார்கள் என்பதனை நான் இந்தச் சபையின் மேலான கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருகக்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் சபை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிப்பதற்கென்றே தினமும் வருகிறார்கள். வந்து சபையில் பிற உறுப்பினர்களையும் பேச விடாமல், இடையூறு செய்வதைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறார்கள். இது சரியா? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், இதை சரி என்கிறீர்களா? (குறுக்கீடு) இது முறை என்கிறீர்களா? (குறுக்கீடு) இப்படி ஒத்துழைப்பு இல்லாமல் இருந்தால் நான் சபையை எப்படி நடத்துவது? இதை நியாயப்படுத்துகிறீர்களா? (குறுக்கீடு) பேரவைத் தலைவர் இருக்கையை முற்றுகையிட்டு, பேரவைத் தலைவரிடம் தகாத வார்த்தைகளைப் பேசியது முறையா? பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இதற்குப் பரிந்துப் பேசுகிறீர்களா?

***திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முற்றுகை இட்டது தவறு. ஆனால், கவன ஈர்ப்பின்மீது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கின்றபோது, தற்போது எழுப்பப்பட்ட பிரச்சினையின்மீது பதில் சொல்லியிருந்தால் பரவாயில்லை. தேவையற்ற பிரச்சினைகளை கிளப்புவதென்பது. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை எழுந்து பதில் சொல்ல விட்டார்களா? (குறுக்கீடு)

2014 ஜூலை 22]

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், உட்காருங்கள்; நான் சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களது உரையில் ஏதாவது உங்களுக்கு சந்தேகங்கள், விளக்கங்கள் கேட்க வேண்டுமென்றால் யாராவது ஒருவர் எழுந்து கேட்கலாம். முன்வரிசையில் அவர்களது தலைவர்களெல்லாம் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் எழுந்து கேட்கலாம் அல்லவா? கடைசி வரிசையில் இருந்தவர்கள் விறு விறு என்று எழுந்து வந்து, பேரவைத் தலைவர் அவர்கள் இருக்கையை முற்றுகையிட்டு, தேவையில்லாத குழப்பத்தை உண்டாக்குகிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைவரும் பேசுவதற்கு அனுமதி கொடுத்துக்கொண்டுதான் இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய உரையில் ஏதாவது விளக்கம் கேட்க வேண்டுமென்றால் யாராவது ஒருவர் மட்டும்தானே கேட்க முடியும்? சபைத் தலைவர் இருக்கையை ஒட்டுமொத்தமாக வந்து முற்றுகையிட்டால், அது எவ்வாறு நியாயமாகும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், பதிலுரையை முடியுங்கள். சீக்கிரம்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட subject தானா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். பேரிடர்களான வறட்சி, வெள்ளம், சுனாமி, நிலச்சரிவு மற்றும் புயல் இவற்றில் மாண்புமிகு அம்மா அவர்கள் கடந்த காலங்களிலே என்னென்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்பதை இந்தப் பேரவையில் பதிவு செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இங்கே எடுத்து வைத்தேன். குறிப்பாக, இப்போது கோஷமிட்டு வெளியே சென்றிருக்கும் மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, 2009 ஆம் ஆண்டு வறட்சி ஏற்பட்டபோது, 24.25 கோடி ரூபாய்தான் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே சொல்லி, தற்போது அவர்கள் அது வேண்டும், இது வேண்டும் என்றெல்லாம் கேட்கிறார்கள். தமிழக மக்களுக்கு ஒரு கஷ்டமென்றால், வாரி வாரி வழங்கக் கூடிய ஒரே தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்

[திரு. ஆர்.பி. உதயகுமார்] [2014 ஜூலை 22

தலைவி அம்மா அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு பல்வேறு வரலாற்றுச் சான்றுகள் இங்கே இருக்கின்றன.

ஆகவே, இன்றைக்கு மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கின்ற அறிவார்ந்த கருத்துகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகின்றேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையாக வறட்சி பாதித்துக்கொண்டிருக்கிறது. அநேகமாக குடிநீரிலிருந்து, கால்நடைகளுக்குத் தீவனங்களிலிருந்து, கிராமப்புற விவசாயம் வரை முழுவதும் இன்றைக்கு மிக மோசமாக மாறிவிட்டது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லாசர், இதுசம்பந்தமாகப் பேசி முடித்துவிட்டார். திரும்பவும் நீங்கள் அதையே பேசுகிறீர்களே? (குறுக்கீடு)

செல்வி கே. பாலபாரதி: பரிசீலிக்கிறேன் என்றுதான் சொல்லி இருக்கிறார். என்ன நடவடிக்கை என்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் அவர்கள் பேசி முடித்துவிட்டார். திரும்பவும் நீங்கள் பேசுவது நல்ல முன்மாதிரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)